**கவனிக்க** .- *12.07.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1820 - 2013 ජූලි මස 19 වැනි සිකුරාදා - 2013.07.19**

*1820 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1688 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1693 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | 1694 |


**கவனிக்க.**- (i) *பாராளுமன்ற புலமைப்பரிசில் சபை (நீக்கம்) சட்டமூலம் 2013, மே மாதம் 10 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

(ii) *குல்லியத்துல் இமாம் சாபிஈ அரபுக் கல்லூரி (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2013, யூன் மாதம் 21 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2013, ஓகத்து மாதம் 08 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, யூலை மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பதவிகள் — வெற்றிடம்

**சீதாவக்கபுர நகர சபை**

பதவி - வெற்றிடங்கள்

**மேல் மாகாண அரச சேவை வெற்றிடங்கள்**

மேல் மாகாண, மாகாண அரச சேவையின் சீதாவக்கபுர நகர சபையில் நிலவும் வெற்றிடங்களுக்கு ஆட்களை சேர்த்துக்கொள்வதற்காக கீழே குறிக்கப்படும் தகைமைபெற்ற மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. அறிவித்தலில் கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் தயார் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை (12" × 8" அளவிலான) "செயலாளர், சீதாவக்கபுர நகர சபை, அவிஸ்ஸாவெல்லை" என்ற முகவரிக்கு 2013.08.02 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கும் வண்ணம் பதிவுத்தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். அல்லது நேரடியாக வந்து ஒப்படைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும். பூரணப்படுத்தாத அத்துடன் குறிப்பிட்ட திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். ஏற்கனவே அரச சேவையில் கடமையாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப்படிவத்தினை தத்தமது திணைக்களத் தலைவரின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

| இலக்கம் | பதவிப் பெயர் | வெற்றிடங்கள் | சம்பள அளவு | தேவையான கல்வி தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| 01 | மேசன் (தொழில்நுட்பம் தரம் III) | 01 | ரூ. 12,210-10 x 130-10×160-12×170-ரூ. 18,600 (PL2-(2006 A)) | (i) தேசிய கல்விப் பொதுத்தராதர (சா.தர) அல்லது கல்வி பொதுத்தராதர (சா. தர) பரீட்சையில் 02 பாடங்களில் திறமைச்சித்தியுடன் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருத்தல் 05 பாடங்களில் ஒரே முறையில் தேர்ச்சி றெ்றிருத்தல் வேண்டும். |
| | | | | (ii) பதவி தொடர்பான 02 வருட கால பயிற்சியைப் பெற்றிருத்தல் (அரச பதிவு செய்யப்பட்ட நிலையமொன்றின் அத்தாட்சிப்பத்திரம் இணைத்தல் வேண்டும்.) |
| | | | | (iii) பதவி தொடர்பான தொழிற்றகைமை (NVQ) ஆம் மட்ட அத்தாட்சிப்பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும். |
| | | | | அல்லது |
| | | | | தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் (DTE) பதவி தொடர்பான ஒரு வருடத்திற்கு குறையாத பாடநெறியை பூர்த்தி செய்து அத்தாட்சிப்பத்திரம் பெற்றிருத்தல். |
| | | | | அல்லது |
| | | | | தேசிய இளைஞர் மன்றத்தின் (NYSC) தொழில் சார்ந்த ஒரு வருடத்திற்கு குறையாத பாடநெறியை பூர்த்தி செய்து, அத்தாட்சிப்பத்திரம் பெற்றிருத்தல். |
| | | | | அல்லது |
| | | | | இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையின் (VTA) தொழில் சார்ந்த ஒரு வருடகால பாடநெறியை பூர்த்தி செய்து, அத்தாட்சிப்பத்திரம் பெற்றிருத்தல். |
| | | | | அல்லது |

| இலக்கம் | பதவிப் பெயர் | வெற்றிடங்கள் | சம்பள அளவு | தேவையான கல்வி தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | | | தேசிய பயிலுநர் மற்றும் தொழில் பயிற்சியளிக்கும் திணைக்களத்தின் (NAITA) தொழில் சார்ந்த ஒரு வருடத்திற்கு குறையாத பாடநெறியை பூர்த்தி செய்து, அத்தாட்சிப்பத்திரம் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>மூன்றாம் மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவில் பதிவுசெய்துள்ள தொழில் பயிற்சிநிலையமொன்றில் தொழில்சார்ந்த ஒரு வருடத்திற்கு குறையாத பாடநெறியைப் பூர்த்தி செய்து, சான்றிதழ் பெற்றிருத்தல். |
| 02 | உருக்கி இணைப்பாளர் | 01 | ரூ. 12,210-10 x 130-10×145-10×160-12×170-ரூ. 18,600 (PL-2(2006 A)) | (i) கல்விப் பொதுத்தராதர (சா.தர) பரீட்சையில் ஏதாவது 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருத்தல். அதில் 05 பாடங்களில் ஒரே முறையில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.<br>(ii) தொழில் சார்ந்த இரண்டு வருட பயிற்சியைப் பெற்றிருத்தல் (அரச பதிவு செய்யப்பட்ட நிலைய மொன்றின் சான்றிதழ் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.)<br>(iii) தொழில் சார்ந்த தேசிய தொழில் தகைமை (NVQ) 3 ஆம் மட்ட சான்றிதழ் பெற்று சமர்ப்பித்தல்.<br>அல்லது<br>தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் (DTET) தொழில்சார் ஒரு வருடகால பயிற்சிநெறியைப் பூர்த்தி செய்து சான்றிதழ் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>தேசிய இளைஞர் பேரவையின் (NYSC) ஒரு வருட கால பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்து, சான்றிதழ் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையின் (VTA) தொழில் சார்ந்த ஒரு வருடகாலத்துக்கு குறையாத பாடநெறியை பூர்த்தி செய்து, சான்றிதழ் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>தேசிய பயிலுநர் மற்றும் தொழில் பயிற்சித் திணைக்களத்தின் (NAITA) தொழில் சார்ந்த ஒரு வருடத்திற்கு குறையாத பாடநெறியொன்றை பூர்த்தி செய்து, சான்றிதழ் பெற்றிருத்தல்.<br>அல்லது |

| இலக்கம் | பதவிப் பெயர் | வெற்றிடங்கள் | சம்பள அளவு | தேவையான கல்வி தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | | | மூன்றாம் மற்றும் தொழில் கல்வி ஆணைக் குழுவில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனமொன்றில் தொழில்சார்ந்த ஒரு வருடத்திற்கு குறையாத பாட நெறியைப் பூர்த்தி செய்து, சான்றிதழ் பெற்றிருத்தல். |
| 03 | சாரதி (II ஆ வகுப்பு) | 06 | ரூ. 12,470-10 x 130-10×160-12×170-ரூ. 18,860 (PL-3(2006 A)) | (i) கல்விப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதிக் கப்பட்ட பாடசாலை ஒன்றில் குறைந்தது 8 ஆம் தரத்தில் 9 ஆம் ஆண்டில் தேர்ச்சி பெற்றிருத்தல்.<br>(ii) தனியார் வாடகை வாகனமும் 24 அந்தர் பாரம் குறைவான ஸ்டேசன் வெகன் வாகனம் ஓட்டும் மோட்டார் போக்குவரத்து ஆணையாளரால் வெளியிடப்பட்ட நிபுணத்துவம் பற்றிய சான்றிதழ் பெற்றிருத்தல் (சாரதி அனுமதிப்பத்திரம்)<br>(iii) சாரதியாக கடமையாற்றியது பற்றிய 03 வருடகால அனுபவம் பற்றிய சான்றிதழ் சமர்ப்பித்தல் வேண்டும்.<br>(iv) ஆகக்குறைந்த உயரம் 05 அடியாகும்.<br>(v) இரவு பகல் நேரங்களில் சேவை புரியுமுகமாக நல்ல உடல் நிலையும் தெளிவான கண் பார்வையும் உள்ளவராக இருத்தல்.<br>(vi) வீதிச் சட்டக்கோவை பற்றி நன்றாக அறிந்திருத்தல் வேண்டும். |
| 04 | இயந்திரம் இயக்குனர் முதலாம் தரம் | 02 | ரூ. 12,210-10 x 130-10×145-10×160-12×170-ரூ. 18,600 (PL-2(2006 A)) | (i) தேசிய கல்விப் பொதுத்தராதர (சா.த.) பரீட்சை யில் அல்லது கல்விப் பொதுத் தராதர (சா. த) பரீட்சையில் ஏதுமொரு 02 பாடங்களில் சித்தியடைந்து இருத்தல்.<br>(ii) பாரம் 34 அந்தர் கொண்ட மோட்டார் வாகனம் மற்றும் பாரமான ட்ரேலர் மற்றும் 32 பிரயாணிகளுக்கு மேல் ஏற்றிச் செல்லக்கூடிய அனுமதிப்பத்திரம் உள்ள பஸ்வண்டியை ஓட்டுவதற்கான மோட்டார் போக்குவரத்து ஆணையாளரால் வெளியிடப்பட்ட நிபுணத்துவம் பற்றிய சான்றிதழ் பெற்றிருத்தல் (வாகன சாரதிப்பத்திரம்)<br>(iii) ஆகக்குறைந்த உயரம் 05 அடி 06 அங்குலமாக இருத்தல் வேண்டும்.<br>(iv) சேர்த்துக்கொள்ள இருக்கும் பாரமான இயந்திரம் ஓட்டியதற்கான ஒரு வருடத்திற்கு குறையாத அரச அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றால் பெற்றுக்கொள்ளப்பட்ட நிபுணத்துவ சான்றிதழ். (ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமாக அரச நிறுவனம் ஒன்று, மாகாண அரச நிறுவனம், உள்ளூராட்சி அரச நிறுவனம், அரை அரச நிறுவனம், உள்ளூராட்சி நிறுவனம், அல்லது அரசால் பதிவுசெய்யப்பட்ட நிறுவனம்.) |

| இலக்கம் | பதவிப் பெயர் | வெற்றிடங்கள் | சம்பள அளவு | தேவையான கல்வி தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | | | (v) மோட்டார் இயந்திரம் பற்றிய ஆரம்ப அறிவு இருத்தல் வேண்டும். |
| 05. | அலுவலக பணியாளர் சேவை II ஆம் வகுப்பு அலுவலக பணியாளர் | 01 | ரூ. 11,730-10 x 120-10×130-10×145-12×160-ரூ. 17,600 (PL-1(2006 A) ஆரம்பப் படி 12 | கல்விப் பொதுத்தராதர (சா.த.) பரீட்சையில் ஒரே முறையில் ஏதாவது 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல். |
| 06. | அலுவலக பணியாளர் சேவை II ஆம் வகுப்பு (காவலாளி) | 05 | ரூ. 11,730-10 x 120-10×130-10×145-12×160-ரூ. 17,600 (PL-1(2006 A) ஆரம்பப் படி 12 | கல்விப் பொதுத்தராதர (சா.த.) பரீட்சையில் ஒரே முறையில் ஏதாவது 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல். |
| 07. | அலுவலக பணியாளர் சேவை III ஆம் வகுப்பு பணி/வெளிக்கள தொழிலாளி | 02 | ரூ. 11,730-10 x 120-10×130-10×145-12×160-ரூ. 17,600 (PL-1(2006 A) | ஆகக் குறைந்த தகைமை 8 ஆம் தரம்/9 ஆம் ஆண்டு சித்தி பெற்றிருத்தல். |
| 08. | அலுவலக பணியாளர் சேவை III ஆம் வகுப்பு (சுகாதாரப் பணியாளர்) | 14 | ரூ. 11,730-10 x 120-10×130-10×145-12×160-ரூ. 17,600 (PL-1(2006 A) | 1. கல்வித் தகைமை கருதப்படமாட்டாது. |

**3. வயது எல்லை :**

(1) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி தினத்திற்கு வயது 18 வருடத்திற்கு குறையாமலும் 45 வருடத்தை தாண்டாமலும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரச சேவையில் உள்ளவர்களுக்கு இந்த வயதெல்லை பொருந்தமாட்டாது.

**4. பொதுவான தகைமைகள் :**

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(ii) நல்ல நடத்தையும் சிறந்த சுகாதார நிலையும் கொண்டவராக இருத்தல் வேண்டும் ;
(iii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி தினத்திற்கு முன்னுள்ள 03 வருட காலத்தில் மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசித்தவராக இருத்தல் வேண்டும் ;
(iv) விண்ணப்பங்கள் கோரியதின் பின்னர் அல்லது கோரப்படும் காலத்தில் அல்லது சேர்த்துக்கொள்வதை தாமதப்படுத்துவது அல்லது மாற்றம் செய்வது அல்லது இவ்வறிவித்தலை இல்லாமல் செய்வது திருத்தி அமைப்பது என்பன சீதாவக்க நகர சபை செயலாளரின் கடமையாகும் ;

**5. சேர்த்துக்கொள்ளப்படும் முறை :**

(i) தகைமை பெற்றவர்களான விண்ணப்பதாரர்களை பொது நிருவாக சுற்று நிருபம் இலக்கம் 24/95 இன் படி முறைமைசார் நேர்முகப்பரீட்சை ஒன்றின் மூலம் சேர்த்துக்கொள்ளப்படும் ;
(ii) மேசன், உருக்கி இணைப்பாளர் எழுத்துமூல மற்றும் செய்முறைசார் பரீட்சையின் மூலம் புள்ளிகளின் அடிப்படையில் முறைசார் நேர்முகப்பரீட்சையின் மூலம் சேர்த்துக்கொள்ளப்படும்.
(iii) சாரதிகள் நேர்முகப் பரீட்சையின் மூலமும் செய்முறைசார் பரீட்சையின் மூலமும் தேர்ந்தெடுக்கப்படும்.
(iv) இயந்திர இயக்குனர் பதவி வாய்மொழி பரீட்சை மற்றும் செய்முறைசார் பரீட்சையின் புள்ளி அடிப்படையில் நேர்முக பரீட்சையின் மூலம் சேர்த்துக்கொள்ளப்படும்.

**சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனை :**

(i) இந்தப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கும் உரியதுமாகும் ;
(ii) விதவை/தபுதாரர், அநாதை ஓய்வூதியத்திற்கு நிதியம் செலுத்த வேண்டும் ;
(iii) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் மூன்று வருட கால தகுதி காண் காலத்திற்கு அமர்த்தப்படும். அந்த தகுதிகாண் காலத்தில் தமது வேலை, வரவு மற்றும் நடத்தை என்பன சீராக இருந்தால், தகுதிகான் கால இறுதியில் சேவையில் நிரந்தரமாக்கப்படுவர். ஏற்கனவே அரச சேவையில்/மாகாண அரச சேவையில் நிரந்தர சேவையில் உள்ளவர்கள் ஒரு வருடகால கண்காணிப்பு அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படும் ;

(iv) தாபனக் கோவையின் நிபந்தனைகளுக்கும் மேல் மாகாண சபை நிதி நிபந்தனைகளுக்கும் கௌரவ ஆளுநர் அவர்களின் கட்டளைகளுக்கும் மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் காலத்துக்குக்காலம் பிறப்பிக்கப்படும் கட்டளைகளுக்கும் உள்ளூராட்சி ஆணையாளர் அவர்களின் மற்றும் திணைக்களத் தலைவரின் கட்டளைகளுக்கும் அமைவாக சகல ஊழியர்களுக்கும் கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பதாரர்கள் கீழே குறிக்கப்படும் எழுத்தாவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை தமது விண்ணப்பப்பத்திரத்துடன் இணைத்து அனுப்பவேண்டும் :-

(1) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ;
(2) தேசிய அடையாள அட்டையின் பிரதி/பயணச் சீட்டின் பிரதி ;
(3) அண்மையில் பெற்றுக்கொண்ட (6 மாதத்திற்குள்) நன்னடத்தை பற்றிய நற்சாட்சிப்பத்திரங்கள் 02.
(4) வதிவை உறுதிப்படுத்துவதற்காக அண்மையில் (6 மாத காலத்திற்குள்) பிரதேச செயலாளரின் கையொப்பத்துடன் பெற்றுக்கொண்ட கிராம அலுவலர் சான்றிதழ்;
(5) செல்லுபடியாகவுள்ள சாரதிப்பத்திரத்தின் பிரதி (சாரதிப் பதவிக்கு மாத்திரம்)
(6) கல்விச் சான்றிதழ் மற்றும் தொழில் தகைமை பற்றிய சான்றிதழ் ;
(7) அனுபவங்கள் பற்றிய சான்றிதழ்கள்.

எம். எச். டீ சசிகா தேவபிரிய,
செயலாளர்,
சீதாவக்கபுர நகர சபை.

சீதாவக்க நகர சபை அலுவலகம்,
அவிஸ்ஸாவெல்ல,
2013, யூன் மாதம் 26 ஆந் திகதி.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சீதாவக்கபுர நகர சபை - அவிசாவளை**

மேல் மாகாண உள்ளூராட்சி அரச சேவையின் ........................................................................ பதவி

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
முதலெழுத்தில் கூறப்படும் பெயர்கள் :----.
2. நிரந்தரமாக வசிக்கும் மாவட்டம் :----.
3. நிரந்தர முகவரி :----.
4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
5. பால் நிலை ஆண்/பெண் :----.
விவாகமானவரா/விவாகமாகாதவரா :----.
6. பிறந்த திகதி :-
2013.07.26 ஆந் திகதிக்கு வயது :-
வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
7. இலங்கைப் பிரசையானது பிறப்பின் மூலமா? பதிவின் மூலமா? :----.
8. கல்வித் தகைமைகள் (தேர்ச்சிபெற்றுள்ள பரீட்சைகள் பற்றிய விபரங்கள்) :-
(i) தேர்ச்சி பெற்ற வருடம்/தரம் :----.
(ii) க. பொ. த. (சா/தர) ப் பரீட்சை :----.
சுட்டிலக்கம் :----.
பரீட்சை வருடமும் மாதமும் :----.
தேர்ச்சி பெற்ற பாடங்கள்

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| ............ | ............ | ............ | ............ |
| ............ | ............ | ............ | ............ |
| ............ | ............ | ............ | ............ |
| ............ | ............ | ............ | ............ |

(iii) க. பொ. த. (உ/த) ப் பரீட்சை :----.
சுட்டிலக்கம் :----.
பரீட்சை வருடமும் மாதமும் :----.
தேர்ச்சி பெற்ற பாடங்கள்

| பாடம் | தரம் |
|---|---|
| ............ | ............ |
| ............ | ............ |
| ............ | ............ |
| ............ | ............ |

9. தொழில்சார் தகைமைகள் (சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும்) :-
10. சேவை பற்றிய தகைமை :----.
11. நீர் எப்போதாவது ஏதும் குற்றத்தின் பேரில் நீதிமன்றம் ஒன்றால் குற்றவாளியாக காணப்பட்டுள்ளீரா? :----.
12. இங்கு குறிக்கப்படும் சகல விடயங்களும் எனது அறிவுக்கு எட்டிய விதத்தில் மற்றும் நம்பிக்கையின் படி உண்மையானதும் சரியானதும் என உறுதிமொழிகிறேன். இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகளின் பிரகாரம் என்னால் ஏதும் பிழையான தகவல்கள் தரப்பட்டுள்ளதாக நிரூபிக்கப்பட்டால் நான் நியமனம் பெற தகைமை அற்றவர் என்பதையும் நியமனம் பெற்றபின் தெரியவரின் சேவையிலிருந்து அகற்றப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

------,
விண்ணப்பதாரரின் கையொப்பம்

திகதி :----.

**ஏற்கனவே அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கான திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

இந்த விண்ணப்பதாரராகிய திரு./திருமதி/செல்வி ......................................................... என்பவர் தற்போது இந்தத் திணைக்களத்தில்/ தாபனத்தில் .......................................... ஆக கடமை புரிகிறார். அவர் சேவையிலிருந்து விடுவிக்கமுடியும்/விடுவிக்க முடியாது. அவர் எந்தவிதமான ஒழுக்காற்று நடவடிக்கைக்கும் (எச்சரிக்கை தவிர்ந்த) ஆளாக்கப்படவில்லை என்பதை இத்தால் சான்றுப்படுத்துவதோடு விண்ணப்பப்படிவத்தை சிபாரிசு செய்து இத்தால் சமர்ப்பிக்கின்றேன்.

--------,
திணைக்கள தலைவரின் கையொப்பம்.

பெயர் :-----.
பதவி :-----.
திணைக்களம்/தாபனம்:----.
(பதவி முத்திரை இடவும்)
திகதி : -----.

7-448

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**தெஹிஓவிட்ட பிரதேச சபை**

அங்கீகாரம் பெற்ற துணைவிதி

261 ஆம் அத்தியாயமான 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகாரம் பெற்ற துணைவிதிகள்) சட்டத்தின் 03 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கேற்ப தெஹிஓவிட பிரதேச சபையினால் 2012.10.27 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தில் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 11.02 ஆம் இலக்க முன் மொழிதழுக்கு அங்கீகாரம் பெறப்பட்டதாக இத்தால் அறிவித்தல் செய்யப்படுகின்றது.

கே. ஏ. ஐ. அமில ருவன் கந்தேஆரச்சி,
தவிசாளர்,
தெஹிஓவிட பிரதேச சபை.

தெஹிஓவிட பிரதேச சபை அலுவலகம்,
05.11.2012.

**அட்டவணை**

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (விளைவாந்தன்மை ஏற்பாடுகள்) சட்டத்தின் (1) ஆம் உப பிரிவின் (அ) பந்தியுடன் வாசிக்க வேண்டிய 261 ஆம் அத்தியாயமான 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகாரம் பெற்ற துணை விதிகள்) சட்டத்தின் 02 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் சப்பிரகமுவ மாகாண சபையில் உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சருக்கு குறித்தொதுக்கப் பட்டுள்ள அதிகாரங்களுக்கேற்ப தயாரிக்கப்பட்ட 2011.01.28 ஆந் திகதிய 1691 ஆம் இலக்கமும் உடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் IV (ஆ) பிரிவில் வெளியிடப்பட்ட, சப்பிரகமுவ மாகாண சபையினால் நிறைவேற்றப்பட்டதாக 2012.03.30 ஆந் திகதியும் 1752 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக

சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் IV (அ) பிரிவில் வெளியிடப்பட்டதுமான சப்பிரகமுவ மாகாணத்தில் பிரதேச சபைகளில் நுளம்பு மற்றும் நோய் தொற்றும் கிருமிகளை அழித்தல் சம்பந்தமான நகல் துணைவிதி இம்முன் மொழிதலை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதி முதல் நடைமுறைப்படுத்துவதற்கு, ஏற்றுக்கொள்வதற்கு, மேலே உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகாரம் பெற்ற துணைவிதிகள்) சட்டத்தில் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் தெஹிஓவிட பிரதேச சபை முன்மொழிகின்றது.

7-420

---

**குச்சவெளி பிரதேச சபை**

மீள் வரிமதிப்பு - 2013

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைச் சட்டத்தின் பந்தி 134 உப பிரிவு (i), (ii), (v) இற்கமைவாகவும், கிழக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சரின் ஈபிச/சிஎம்எஸ்ஏபீ/எல்ஜீ/பீ/பீஎஸ்/குச் இலக்க 26.06.2013 ஆந் திகதிய கடிதத்தின் அங்கீகாரத்திற் கமைவாகவும் குச்சவெளி பிரதேச சபையின் 26.06.2013 ஆந் திகதிய 4 ஆம் இலக்க, சபைத்தீர்மானத்திற்கமைவாகவும் குச்சவெளி பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் கட்டமைக்கப்பட்ட (அபிவிருத்தி அடைந்த) பிரதேசங்களாக பிரகடனப்படுத்தப்பட்டு ஆதனவரி அறவிடப்பட்டுவரும் பகுதிகளில் 2013 ஆம் ஆண்டு முதல் வருடாந்தப் பெறுமானத்தின் 6% ஐ ஆதனவரியாக அறவிடுவதென்றும், புல்மோட்டை 2 ஆம் வட்டாரத்தில் உள்ள இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டட் ஸ்தாபனத்திற்கான ஆதனவரியாக 2012 ஆம் ஆண்டுக்கென மீள்மதிப்பீடு செய்யப்பட்ட தொகையின் 6% ஐ ஆதனவரியாக அறவிடுவதென்றும் புல்மோட்டை 2 ஆம் வட்டாரத்தில் உள்ள இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடெட் ஸ்தாபனத்திற்கான ஆதனவரியாக 2012 ஆம் ஆண்டுக்கென மீள்மதிப்பீடு செய்யப்பட்ட தொகையின் 6% ஐ அறவிடுவதெனவும், மேலும், இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டட் ஸ்தாபனம் உட்பட அனைத்து வர்த்தக நிறுவனங்களிட மிருந்தும் 2013 ஆம் ஆண்டுக்கான ஆதனவரியாக ஆண்டுப் பெறுமானத்தின் 10% ஐ அறவிடுவதென்றும் இத்தால் சகலருக்கும் அறியத்தரப்படுகின்றது.

அயினியப்பிள்ளை முபாறக்,
தலைவர்,
குச்சவெளி பிரதேச சபை.

குச்சவெளி பிரதேச சபை அலுவலகம்,
நிலாவெளி,
03.07.2013.

7-545

---

**அங்குணுகொலபெலெஸ்ஸ பிரதேச சபை**

அபிவிருத்தியடைந்த பிரதேசமாக பிரகடனப்படுத்தல்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைச் சட்டவாக்கின் 134 ஆவது (i) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபைக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களின்படி அங்குணுகொலபெலெஸ்ஸ பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள இலக்கம் 187 அங்குணுகொலபெலெஸ்ஸ, இலக்கம் 188 ஆச்சாரியகம, 189 யக்காகல, இலக்கம் 190 அமுத்வெவ ஆகிய கிராம சேவகர் பிரிவுகள் அபிவிருத்தி பெற்ற பிரதேசங்களாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென அங்குணுகொலபெலெஸ்ஸ பிரதேச சபையில் 2012.05.29 ஆந் திகதி நடைபெற்ற மாதாந்த பொதுக்கூட்டத்தில் 8 : 4 இலக்கம் கொண்ட பிரேரணையின் மூலம் ஏற்கப்பட்டு, ஹம்பாந்தோட்டை உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் ஹபப/ஏ/வரி. இ/பொது என்ற 2012.09.03 ஆந் திகதிகொண்ட கடிதம் மூலம் அனுமதி கிடைத்திருப்பதனால் மேற்படி கிராம சேவகர் பிரிவுகள் விருத்தி பெற்ற பிரதேசங்களாக இத்துடன் அறிவிப்புச் செய்யப்படுகிறது.

7-626

---

# நானாவித அறிவித்தல்கள்

**பண்டாரவளை மாநகர சபை**

நீர் வடிகாலமைப்பு தொடர்பிலான துணை விதிக்கு கீழான அறிவித்தல்

1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி சட்டத்தின் 2 ஆம் சரத்தின் கீழ் உள்ளூராட்சி அமைச்சரால் தயாரிக்கப்பட்ட 1989.01.20 ஆந் திகதிய 541/17 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் வர்த்தமானி IV (ஆ) பிரிவின் வெளியிடப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட துணைவிதியில் பண்டாரவளை மாநகர சபையினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதியில் IX ஆம் பிரிவில் 32 இன் துணைவிதியில் குறிக்கப்பட்டுள்ள கட்டணம் அதன் துணை விதி II ஆம் சரத்திற்கிணங்க கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு திருத்தம் செய்யப்பட்டு 2013.07.01 ஆந் திகதி தொடக்கம் அறவிடுவதற்கு ஏற்புடையது என மாநகர சபையால் ஏகமனதான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்பதை இத்தால் அறியத்தருகிறேன்.

எனவே, இது தொடர்பில் இல. 1815 க் கொண்ட 2013.06.14 ஆந் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி IV (ஆ) பிரிவின் இம்மாநகர சபையால் வெளியிடப்பட்ட நீர்வடிகாலமைப்பு தொடர்பான துணை விதியின் கீழான அறிவித்தல் நிராகரிக்கப்படுவதற்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதையும் அறியத்தருகிறேன்.

எச். எம். ஜே. ஹேரத்,
மாநகர ஆணையாளர்,
பண்டாரவளை மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
பண்டாரவளை,
2013, யூன் 27.

**அட்டவணை**

1. வீட்டு பணிகள் தொடர்பிலான மாநகர சபை எல்லைக்குட்பட்ட நீர் கட்டணம்.

| அலகு | அலகொன்றின் கட்டணம் ரூபா ச. |
|---|---|
| 01-05 | 10 0 |
| 06-10 | 15 0 |
| 11-15 | 19 0 |
| 16-20 | 30 0 |
| 21-25 | 45 0 |
| 26-30 | 65 0 |
| 31-40 | 90 0 |
| 41-50 | 105 0 |
| 51 இற்கு மேற்பட்டது | 125 0 |

மேற்கூறப்பட்ட கட்டணங்களுக்கு மேலதிகமாக நிலையான கட்டணமாக ரூபா 150 0 அறவிடப்படும்.

II. மாநகர சபை எல்லைக்கு வெளியேயான இடங்களுக்கு வீட்டு உபயோகம் தொடர்பிலான நீர் கட்டணம்.

| அலகு | அலகொன்றின் கட்டணம் ரூபா ச. |
|---|---|
| 01-05 | 20 0 |
| 06-10 | 30 0 |
| 11-15 | 40 0 |
| 16-20 | 50 0 |
| 21-25 | 60 0 |
| 26-30 | 70 0 |
| 31-40 | 80 0 |
| 41-50 | 100 0 |
| 51 இற்கு மேற்பட்டது | 125 0 |

மேற்கூறப்பட்ட கட்டணங்களுக்கு மேலதிகமாக நிலையான கட்டணமாக ரூபா 400 0 அறவிடப்படும்.

III. மாநகர சபை எல்லைக்கு வெளியே அமைந்துள்ள வீட்டு உபயோகம் அல்லாத நிறுவனங்களுக்கான நீர் கட்டணம்.

| அலகு | அலகொன்றின் கட்டணம் ரூபா ச. |
|---|---|
| 01-25 | 75 0 |
| 26-50 | 100 0 |
| 51-75 | 125 0 |
| 76 இற்கு மேற்பட்டது | 140 0 |

மேற்கூறப்பட்ட கட்டணங்களுக்கு மேலதிகமாக நிலையான கட்டணமாக ரூபா 400 0 அறவிடப்படும்.

IV. அரச பாடசாலைகள் தொடர்பிலான நீர்க்கட்டணம்

| அலகு | அலகொன்றின் கட்டணம் ரூபா ச. |
|---|---|
| 01-30 | 15 0 |
| 31 இற்கு மேற்பட்டது | 20 0 |

மேற்கூறப்பட்ட கட்டணங்களுக்கு மேலதிகமாக நிலையான கட்டணமாக ரூபா 200.00 அறவிடப்படும்.

V. வணக்கஸ்தலங்கள் தொடர்பிலான நீர்க் கட்டணம்

| அலகு | அலகொன்றின் கட்டணம் ரூபா ச. |
|---|---|
| 01-30 | 1.50 |
| 31 இற்கு மேற்பட்டது | 2.50 |

மேற்கூறப்பட்ட கட்டணங்களுக்கு மேலதிகமாக நிலையான கட்டணமாக ரூபா 100.00 அறவிடப்படும்.

VI. அரச பாடசாலைகளினால் நிருவகிக்கப்படும் தங்குமிட விடுதிகள் தொடர்பிலான நீர்க் கட்டணம்.

| அலகு | அலகொன்றின் கட்டணம் ரூபா ச. |
|---|---|
| 01-10 | 30 0 |
| 11-20 | 45 0 |
| 21-30 | 50 0 |
| 31-40 | 60 0 |
| 41 இற்கு மேற்பட்டது | 80 0 |

மேற்கூறப்பட்ட கட்டணங்களுக்கு மேலதிகமாக நிலையான கட்டணமாக ரூபா 400.00 அறவிடப்படும்.

VII. வணக்கஸ்தலங்களால் நிருவகிக்கப்படும் வியாபார நிலையங்களுக்கான நீர்க் கட்டணம்

| அலகு | அலகொன்றின் கட்டணம் ரூபா ச. |
|---|---|
| 01-10 | 50 0 |
| 11-20 | 60 0 |
| 21-30 | 70 0 |
| 31-40 | 80 0 |
| 41 இற்கு மேற்பட்டது | 125 0 |

மேற்கூறப்பட்ட கட்டணங்களுக்கு மேலதிகமாக நிலையான கட்டணமாக ரூபா 200.00 அறவிடப்படும்.

VIII. கட்டணங்கள் அறவிடப்படும் பாடசாலைகள், கட்டணங்கள் அறவிடப்படும் முன்பள்ளிகளுக்கான நீர்க் கட்டணம்.

| அலகு | அலகொன்றின் கட்டணம் ரூபா ச. |
|---|---|
| 01-10 | 60 0 |
| 11-20 | 70 0 |
| 21-30 | 80 0 |
| 31-40 | 100 0 |
| 41 இற்கு மேற்பட்டது | 125 0 |

மேற்கூறப்பட்ட கட்டணங்களுக்கு மேலதிகமாக நிலையான கட்டணமாக ரூபா 350.00 அறவிடப்படும்.

IX. சாதாரண உணவகங்கள், தங்குமிடங்கள், விடுதிகள், வியாபார நிலையங்கள், தனியார் வகுப்புகள் மற்றும் அவற்றுக்கான நிர்மாணப் பணிகள் தொடர்பிலான நீர் கட்டணம்.

| அலகு | அலகொன்றின் கட்டணம் ரூபா ச. |
|---|---|
| 01-10 | 60 0 |
| 11-20 | 70 0 |
| 21-30 | 80 0 |
| 31-40 | 100 0 |
| 41 இற்கு மேற்பட்டது | 125 0 |

மேற்கூறப்பட்ட கட்டணங்களுக்கு மேலதிகமாக நிலையான கட்டணமாக ரூபா 400.00 அறவிடப்படும்.

X. அரச நிறுவனங்கள் தொடர்பிலான நீர்க் கட்டணம்.

| அலகு | அலகொன்றின் கட்டணம் ரூபா ச. |
|---|---|
| 01-10 | 55 0 |
| 11-20 | 56 0 |
| 21-30 | 57 0 |
| 31-40 | 58 0 |
| 41 க்கு மேற்பட்டது | 60 0 |

மேற்கூறப்பட்ட கட்டணங்களுக்கு மேலதிகமாக நிலையான கட்டணமாக ரூபா 400.00 அறவிடப்படும்.

XI. தனியார் சுற்றுலா உணவகங்கள், அரச உணவகங்கள் மற்றும் அவற்றுக்கான நிர்மாணப் பணிகள் தொடர்பிலான நீர்க் கட்டணம்.

| அலகு | அலகொன்றின் கட்டணம் ரூபா ச. |
|---|---|
| 01-25 | 75 0 |
| 26-50 | 100 0 |
| 51-75 | 125 0 |
| 76 க்கு மேற்பட்டது | 140 0 |

மேற்கூறப்பட்ட கட்டணங்களுக்கு மேலதிகமாக நிலையான கட்டணமாக ரூபா 1,500.00 அறவிடப்படும்.

XII. வேறு கட்டணங்களும், நிபந்தனைகளும்

3,000 லீட்டரை கொண்ட பவுசர் விநியோகம் - ரூபா 1,500.00
5,000 லீட்டரை கொண்ட பவுசர் விநியோகம் - ரூபா 2,500.00

**மாநகர சபை எல்லைக்கு வெளியேயான "பவுசர்" மூலமாக நீர் விநியோகம்.**

* மாநகர சபை எல்லைக்கு வெளியே ஆரம்பமாகும் 1 கிலோ மீற்றருக்கு லொறி பவுசருக்கு ரூபா 220.00 வீதம் மேலதிக ஒவ்வொரு கிலோ மீட்டருக்கும் ரூபா 120.00 வீதம் மேலதிக கட்டணம் அறவிடப்படும்.

* டெக்டர் (இழுவை இயந்திரம்) மூலம் நீர் பெறுவதாயின் ஒவ்வொரு கிலோ மீட்டருக்கும் ரூபா 100.00 வீதம் அறவிடப்படும்.

XIII. மேற்கூறப்பட்ட சகல கட்டணங்களுக்கும் மேலதிகமாக அரசாங்கத்தின் மூலம் இடைக்கிடை அறவிடப்படும் வரிகளும் சேர்த்து அறவிடப்படும்.

XIV. நீர் வாசிப்புமானி (Meter) அகற்றியபின் மீள பொறுத்தும் வரை முந்தைய இரு மாதங்களின் நுகர்வின் கூட்டுத்தொகையின் சராசரி கட்டணம் அறவிடப்படும்.

XV. புதிய நீர் விநியோகத்திற்கான திட்ட செலவினம் வாடிக்கையாளரிடமிருந்து அறவிடப்படும்.

XVI. புதிய நீர் விநியோகத்தின் போது திட்ட செலவினத்திற்கு புறம்பாக மீள செலுத்தும் வைப்பு பணம் ரூபா 2000.00 வாடிக்கையாளரால் வழங்கப்படல் வேண்டும்.

XVII. 03 மாதங்களுக்கு பிந்திய நீர்க் கட்டணம் செலுத்தும்போது கட்டணத்தில் மேலதிகமாக 10% அறவிடப்படும்.

XVIII. துண்டிக்கப்பட்ட நீர் விநியோகத்தை மீளப் பெறும்போது மேலதிக கட்டணமாக ரூபா 1,000.00, அரசால் அங்கீகரிக்கப்பட்ட வரியும் சேர்த்து அறவிடப்படும்.

7-623/1

---

**பண்டாரவளை மாநகர சபை**

விற்பனை மேம்படுத்தல் வேலைத்திட்டங்கள் நடைபெறும் இடங்களுக்கான கட்டணம் அறவிடல் - 2013

பண்டாரவளை நகர சபை எல்லையில் பல்வேறு நிறுவனங்களால் விற்பனை மேம்படுத்தல் வேலைத்திட்டங்கள் நடாத்துவதற்காக விண்ணப்பிக்கும் பொழுது கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள விபரங்களின் அடிப்படையில் கட்டணங்கள் அறவிடுவதற்கு பண்டாரவளை மாநகர சபையால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இவ்வட்டவணையில் காட்டப்பட்டுள்ள கட்டணங்கள் 2013.07.01 ஆந் திகதி தொடக்கம் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

எச். எம். ஜே. ஹேரத்,
மாநகர ஆணையாளர்,
பண்டாரவளை மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
பண்டாரவளை,
2013, யூன் 27.

**அட்டவணை**

| | இடம் | குறித்த காலம் | கட்டணம் ரூபா ச. |
|---|---|---|---|
| 1. | பண்டாரவளை நகர மத்தியில் அமைக்கப்பட்டுள்ள வேன் நிறுத்து மிடத்திற்கு அருகாமை (சிங்ககிரி உணவகத்திற்கு அருகில்) | ஒரு நாளுக்கு | 4,000 0 |
| 2. | பண்டாரவளை தர்மவிஜய சாலை லொறி நிறுத்தும் இடத்திற்கு அருகில் | ஒரு நாளுக்கு | 2,000 0 |
| 3. | பண்டாரவளை நகரின் வேறு இடங்கள் (நடமாடும் நிழற் குடை மூலம் நடாத்தப்படும் விற்பனை மேம்பாடுகள் உள்ளிட்டவை) | ஒரு நாளுக்கு | 1,000 0 |

7-623/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.